## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 434/2016

நாள் 09.03.2026

DW4 – லோகநாதன்

த/பெ – குருசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of March 2026)**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது தம்பி பூபதி ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளதாக யார் என்னிடம் வந்து சொன்னார்கள் என்றால் கருப்பசாமிதான் வந்து சொன்னார். எனது தம்பி பூபதி எப்போது சாட்சி கையொப்பம் செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் வேறு யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. நான் எனது தம்பி பூபதியின் கையொப்பத்தை அடையாளம் காட்டதான் சாட்சி சொல்ல வந்தேன். எனது தம்பி பூபதியின் விலாசம் 23, நஞ்சப்பகவுண்டர் புதூர், பொகலூர், அன்னூர் தாலுக்கா என்றால் சரிதான். எனது தம்பி அன்னூர் ஆதவன் நகர், ஒட்டராம்பாளையத்தில் இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். நான் சொல்லும் எனது தம்பி பூபதியும், பி.வா.சா.13 செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள பூபதி என்பவரும் வெவ்வேறு நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள பூபதி என்ற கையெழுத்து நான் சொல்லும் எனது தம்பி பூபதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. எனது தம்பி உயிருடன் இருக்கும் வரையில் இந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்திருப்பதாக என்னிடம் எதுவும்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் நான் தாக்கல் செய்துள்ள விடுதலை ஆவணத்தில் உள்ள பூபதி என்பவரும், இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சியாக உள்ள பூபதி என்பவரும் வெவ்வேறு நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால் கருப்பசாமி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

வாதி தரப்பு குறுக்குவிசாரணையையே 5, 6 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.10 17:50:13 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**